# விடியல்

## The Dawn

இதழ்-67, நவம்பர்-2014

தனிச்சுற்றுக்கு மட்டும்

கௌரவ ஆசிரியர்

முனைவர். நா. கண்ணன்

கல்லூரி முதல்வர்

ஒருங்கிணைப்பு

முனைவர்.பெ.கணேசமுருகன்

துறைத்தலைவர்

ஆசிரியர் குழு

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

தட்டச்சு & இதழ் வடிவமைப்பு

முனைவர்சி.ஆர்.சுரேஷ் முனைவர் த.சுந்தரராஜ்

திரு. செ.தங்கராஜ் திரு. மு. சதீஸ்குமார்

வெளியீடு:

**தமிழ்த்துறை**

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA

Knowledge is Power

கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)

திருச்செங்கோடு–637215.

தமிழ்நாடு, இந்தியா.

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal

**Blog:** ksrcasthamizh.blogspot.in

**E-mail:** vidiyalmagazhine@gmail.com

**Website:** ksrcas.edu

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.*

## தலையங்கம்

*சர்வதேச மாணவர் நாள் (International Students' Day) என்பது உலகளாவிய மாணவர் எழுச்சியை நினைவூட்ட ஆண்டுதோறும் நவம்பர்17-ஆம் நாளன்று கொண்டாடப்படுகிறது. 1939-ஆம் ஆண்டில் இதே நாளில் செக்கோசிலவாக்கியாவின் தலைநகர் பிராக்கில் சார்ல்ஸ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாணவர் போராட்டம் நாசிப்படைகளினால் சிதறடிக்கப்பட்டது. போராட்டத்தின் முடிவில் ஜான் ஓப்ளெட்டல் மற்றும் ஒன்பது மாணவர் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர். இதன் பின் செக்கொசிலவாக்கியா நாசிகளால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டது. இந்த தொடர் நிகழ்வுகளின் நினைவாக அனறைய தினம் மாணவர் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்நாள் முதன் முதலில் 1941 ஆம் ஆண்டு அனைத்துலக மாணவர் அமைப்பினால் லண்டனில் கொண்டாடப்பட்டது. இவ்வமைப்பில் அப்போது அகதிகளாக இடம்பெயர்ந்த மாணவர்கள் உறுப்பினர்களாக இருந்தனர். அந்நிகழ்வை ஐக்கிய நாடுகள் அவை அங்கீகரித்ததை அடுத்து ஐரோப்பாவின் தேசிய மாணவர் சங்கம் மற்றும் பல்வேறு அமைப்புகள் வழியாக இந்த மாணவர் அமைப்பு உறுதி பெற்றது. இவை உலக மாணவர்களுக்கு ஒரு பாடம். மாணவர்கள் மனது வைத்தால் அடக்கு முறை அரசுகள் காணாமல் போய் விடும் என்பதை உணர்த்தும் நாள்!*

*உலக நாடுகள் முன்னேற வேண்டுமானால், அதற்கு மாணவர்கள் பங்கு முக்கியம்! ஆக ஜனநாயக சிந்தனையை மாணவர்களிடையே தூண்டி, அவர்களை நாளைய பொறுப்புமிக்க குடிமக்களாக உயர்த்துவதே இதன் நோக்கம்!*

# உள்ளடக்கம்

**கவிதை**....................4-17

- தாய்மையின் தலைமை
- தந்தையின் தன்னிலை
- விவசாயம்
- விருப்பம்
- நட்பு
- தாய்
- ஊழல்
- ஜனநாயகம்
- மழைத்துளி
- வாழ்க்கை
- வியர்வை சிந்துங்கள்
- மனிதன்
- குழந்தை
- வீரநாற்று
- ஹைக்கூ
- உழவன்
- நட்பு
- பெண்
- தாயின் கருவறை
- இதயம்
- காற்றே மயங்கிடாதே
- மழை
- அம்மா
- மரங்களை நேசியுங்கள்
- நினைவுகள்
- எங்கே எனது மரம்
- முடியாது,முடியாது
- ஹைக்கூ
- சிந்தனை செய் தமிழா...
- நட்பு
- வெற்றி
- நட்பு
- புகைப்படம்
- அன்பான நட்பு
- மரம்
- வாழ்க்கை
- புலம்பல்ஸ்
- வாழ்க்கைத் தத்துவம்
- உனக்காக ஓர் இதயம்
- நட்பு
- அம்மா
- கண் தானம்
- ஆசிரியர்
- காளைகளின் கண்ணீர் பேச்சு
- முரண்பாடு
- வாழ்க்கை
- நதிகளைக் குளிப்பாட்டுவோம்
- வாழ்வு

- ஒரு பழமொழி உதிர்கிறது
- வாழ்க்கையின் வழி
- நட்பு
- இலட்சியம்
- முயற்சி
- காலம்
- கோபம்
- மெல்லத் தமிழ் இனி...

**சிறுகதை**................18-22

- தாய்ப்பாசம்
- என் உயிர் தோழி
- தேவதை
- நீதி
- தானத்தில் சிறந்தது நிதானம்
- நீண்டநாள் பசி

**கட்டுரை**...................23-28

- தலைவர்களின் மொழி
- மகாத்மா காந்தியடிகள்

**பொது அறிவு**...........28-31

- International Day of the November
- அபாயங்களை அறிமுகப்படுத்தியவர்கள்
- பொன்மொழிகள்
- வள்ளுவத்தின் சிறப்பு
- தெரிந்துகொள்வோம்
- ரூபாய் நோட்டுகளின் கையெழுத்து
- சின்னச்சின்ன கேள்விகள்
- புத்தரின் போதனைகள்

**ஒளிநிழல் படம்**.......32

- கவிபாடும் காட்சிகள்

# கவிதைகள்

## தாய்மையின் தலைமை

என் கனவில் நீ வரவில்லை
உன் கனவாய் நான் இருந்தேன்
கண்ணிமையாய் காத்தாய்
கைக்குள் போற்றி வளர்த்தாய்
என்னவள் தாயான பின்பும்
என்னை நோயின்றி காத்தாய்
மூடுபனியால் மூச்சடைக்க நேர்ந்ததால்
முந்தாணையால் மூடி குளிர் காத்தாய்
என்னவள் கைப்பிடித்த போதும்
சாலையில் என் கைப்பிடித்து நின்றாய்
உன் கல்லறை அருகில்
இடம் வேண்டாம்
கருவறையில் இடம் வேண்டும்
மறுஜென்மம் என ஒன்று இருந்தால்
நீயே என் தாயாக வேண்டும்

## தந்தையின் தன்னிலை

கை கோர்க்க தேவை இல்லை
தோள் சாய ஆசை இல்லை
கண்டு கொள்ளக் காரணம் இல்லை
கருவிலே நீ என்னை சுமக்கவில்லை
அனைத்து கொண்டாய்
வாழ்நாள் முழுவதும்
கடமை தவறாதலை மகனே
மீண்டும் ஒருமுறை
எனக்கு உயிர்தருவாய்
உன் மகனாகும் வரம் தருவாய்

**ப.சுமேஸ்வரன்**
இரண்டாம் ஆண்டு உயிர்தொழில் நுட்பவியல்

## விவசாயம்

விடிவு கிடைக்கும்
என்னும் எண்ணத்தில்
முடிந்து போன பல வண்ண
மக்களின் வாழ்க்கை
இக்கால விவசாயத்தை நம்பி...

**ஈ.பாலாஜி,**
இரண்டாம் ஆண்டு உயிர் தொழில் நுட்பவியல்,
ஆ பிரிவு.

## விருப்பம்

நீ விரும்பாததை
யார் சொன்னாலும் செய்யாதே..
நீ விரும்புவதை
உலகமே எதிர்த்தாலும்
செய்து முடி!

**சு.ஜமுனா**
இளங்கலை தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நட்பு

மேகம் மழையாகவும்
மழை நதியாகவும்
நதி கடலாகவும்
என் இதயத்தில் - நீ
நட்பாகவும் தோன்றினாய்!

**மு.ஆதிபவானி**
இளங்கலை தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## தாய்

நிஜம்கூட நிழலாய்
மாறிப்போகும் தாயே!
உன் பிரிவினால்....

## ஊழல்

ஊழல் இல்லா நாடு என்று
உறுதி கூறும் அரசியல்
ஊழலிலேயே வீடு கட்டி
வாழ்கின்றது.

**எம்.கீர்த்தனா.**
இரண்டாம் ஆண்டு கணினி அறிவியல் ஈ பிரிவு.

## ஜனநாயகம்

அவசரமான ஒரு நீண்ட பயணம்
என் சொந்த ஊருக்கு
பேருந்திற்குள் இருந்த நெரிசல்
பயணத்தின் அவசியத்தைக்காட்டியது.
ஐந்தாண்டுக்கு ஒருமுறை அரங்கேறும்
இத்திருவிழாவின்
பல வண்ணக் கயிற்றுப்பறவையின்
நடன ஒலிக்கும்
ஒலிப்பெருக்கிகளின் கூக்குரலுக்கும்
பழகிப்போய்விட்டிருந்தன
மூத்த செவிகளும் விழிகளும்.
இன்று புதிதாய் முளைத்த
ஒடுங்கிய குரல்களின் நிசப்தத்தை
என் ஊர் மட்டுமல்ல
சுற்று வட்டாரமே பங்கிட்டிருந்தது
காக்கிச்சட்டையின் கைக்குள் அடங்கிய
பெருங்கூட்டத்தில்
மனிதத்தலைகள்
வரிசையாய் இருந்தன
சூரியனின் தீக்கரம்
பல தலையையும் உடலையும் கீறி
இரத்தத்தை வடிக்கிறது
முதியவர்கள் மூச்சுத்திணருகிறார்கள்
பலவீனமான பாதங்களின்
மோதலிலும் நெருக்குதலிலும்
குறுக்கும் நெடுக்குமாய் கிடக்கிறது
ஜனநாயகம்.

**த.சுந்தரராஜ்,**
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை.

## மழைத்துளி

விவசாய நிலத்திற்க பதிலாக
வெளிநாட்டில் ஏழை சிந்தும்
வியர்வைத் துளிக்கும்
விளைச்சலை எண்ணிக் கொண்டிருக்கும்
முதலாளிகளின்
கண்ணீர்த்துளிக்கும்
பஞ்சத்திற்கு பயப்பட்டு
உயிரைத் துறந்த
விவசாய குடும்பத்தின்
இரத்தத் துளிக்கும்
காரணம்
பருவம் மாறிப் பெய்யும் மழைத்துளி...!

## வாழ்க்கை

இருளில் இருந்து
வெளிச்சத்திற்கு வந்து
மீண்டு இருளிற்குச் செல்வதுதான்
வாழ்க்கை
அதாவது
கருவறை முதல் கல்லறை வரை

**குணசேகரன்.ஆர்.**
இரண்டாமாண்டு உயிரிதொழில்நுட்பவியல் ஆ-பிரிவு

## வியர்வை சிந்துங்கள்...

கவலையை நினைத்து கண்ணீர்
சிந்துவதை விட...
இலட்சியத்தை நினைத்து
வியர்வை சிந்துங்கள்..
உங்களாலும்
சாதிக்க முடியும்.

## மனிதன்

அடிக்கடி தவறு செய்கிறவன் அப்பாவி
ஒரே தவறைத் திரும்பத்
திரும்பச் செய்கிறவன் மூடன்
ஒரு தவறுமே செய்யாதவன் மரக்கட்டை,
தன்னையறியாமல் தவறு செய்து,
தன்னையறிந்து
திருத்திக் கொள்கிறவனே மனிதன்!

**எம் ஜனனி,**
முதலாண்டு உயிர் வேதியியல்

## குழந்தை

பொய் சொல்ல
வேண்டியதில்லை...
எதிர்பார்த்து ஏமாற
வேண்டியதில்லை...
வெட்டிக்கதைகள்
வேண்டியதில்லை...
கவலையில் தூக்கம் கெட
வேண்டியதில்லை...
முகத்திற்கு முன்
சிரித்துப்பேசி முதுகுக்குப்பின்
குறைத்துப்பேச
வேண்டியதில்லை...
ஊருக்கு உபதேசம் செய்ய
வேண்டியதில்லை...
நான் குழந்தையாகவே
இருந்திருந்தால்!

- **நா.அருணா**
இளங்கலை தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## வீர நாற்று

எங்கள் தமிழ்
இருட்டில் விளக்கு
எங்கள் தமிழ்
வறண்ட பூமியில் பசுமை
எங்கள் தமிழ்
பாலைவனத்தில் நீரூற்று
எங்கள் தமிழ்
கோழையையும் வீரனாக்கும்
தீக்காற்று?

- **வே.தீபிகா-**
இளங்கலை தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## ஹைக்கூ

சவ ஊர்வலம்
கதறி அழுகின்றன
நாளையப் பிணங்கள்!

**ர.சத்யா,**
இரண்டாமாண்டு உயிரிதொழில்நுட்பவியல் ஆ-பிரிவு

## உழவன்

உணவின்றி உலகமில்லை!
உழவனின்றி யாருமில்லை!
நம் பசியை போக்கும் உழவன்தான்
நமக்கு இரண்டாவது தெய்வம்!
ஏறுப்பிடிச்சி சோறுப்போடும்
இரண்டாவது தெய்வம் உழவன்!
கோட்டைகள் பசியால் சரியாம
இருக்க முதற்காரணம் அவன்தான
நாளை நடப்பதை இன்றே
சொல்கிறோம் - உழவன் இல்லாத
உலகம் உயிரின்றி அலையும் கூடு!
வெளிப்படையாக மறந்து விட்டோம்
நாம் அவனை!
நன்றியாவது சொல்லிவைப்போம்
நலமுடன் வாழவைத்த
நம் உழவனுக்கு

- **கலையரசி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு.

## நட்பு

நீ மென்மேலும் உயரும்போது
நீ யார் என்று
நண்பர்கள் அறிவார்கள்- ஆனால்
நீ காயம்பட்டபோது
உண்மையான நண்பர்கள்
யார் என்று
நீ அறிவாய்!

- **ம.இந்துமதி**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## பெண்

அன்புக்கு ஊற்றாய் இருப்பவள் பெண்
அடிமை தனத்தை உடைத்தவள் பெண்
வெற்றிக்கு வழியாக கொண்டவள் பெண்
தோல்வி கண்டு துவளாதவள் பெண்
ஊசியில் காற்யாய் நுழைபவள் பெண்
உடலுக்கு உயிர் கொடுத்தவள் பெண்
கண்ணிற்கு இமை போன்றவள் பெண்
வானமாய் உயர்ந்தவள் பெண்
நட்சித்திரமாய் பிரகாசிப்பவள் பெண்
வெண்ணிலா போல வெண்மை மனம்
கொண்டவள் பெண்
இப்படிப்பட்ட பெண்ணை வணங்கிட
வேண்டும்.

**செ.சௌந்தரி,**
இரண்டாமாண்டு கணினி அறிவியல், ஈ பிரிவு

## தாயின் கருவறை

மீண்டும் அமர முடியாத
ஒரே சிம்மாசனம்
தாயின் கருவறை!

## இதயம்

உனக்குப் பிடிக்கும் இதயம்
உனது அருகில் இல்லையெனில்
சுவாசிக்கும்
காற்று சுமையாகத்தான்
தெரியும்...

- **ச.கௌசல்யா**
இளங்கலை தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## காற்றே மயங்கிடாதே

அவள் தந்த மடல்களை – நிலாவே
உன்னிடம் தருகிறேன்
படித்து விடாதே,
அவள் தந்த முத்தத்தை – மேகமே
உன்னில் வைக்கிறேன்
சிந்தி விடாதே,
எங்கள் சந்திப்பிடத்தைக்
காட்டுகிறேன் - மின்னலே
யாரிடமும் காட்டிவிடாதே,
அவளை அறிமுகம்
செய்கிறேன் - காற்றே
மயங்கி விடாதே...

- **செ.ரேவதி**
இளங்கலை தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## மழை

நான் கண்விழித்து எழுந்தேன்
புதுகவிதை ஒன்று எழுத
வயிறாய் வளா்ந்த வாழ்க்கையை
பல நாள்படா்ந்த ஆசையை
சிறகாய் வாழ்ந்தேன் என் பாதையில்
ஒளிவிட்ட காதலும், என்
தேவியிடத்து நாதமும்
ஓய்ந்ததே, அலைகடலில் கலந்ததே !
காா்குயில் கலங்கியதே
கருமேகம் கண்டு
ஓ...... என்று அழுதது.

**பிரவீண்,கே.**
முதலாண்டு உயிா்வேதியியல்.

## அம்மா

நீ
உயிரையும் மெய்யையும்
ஒன்று சேர்க்கும்
உயிர்மெய்.
அம்மா
அன்பே கடவுள்
என்பது எதிர்மறை
அன்பே அம்மா
என்பது நேர்மறை
ஏனெனில்
கடவுள் கூட கைம்மாறு கேட்கிறது
நீ கைம்மாறு கேட்காமல்
அன்பு காட்டும்
கடவுள்..!

- **ச.நந்தினி**
இளங்கலை தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## மரங்களை நேசியுங்கள்

மழைத்துளிகளே
மாபெரும் கண்டனம்
மரங்களின்
காயத்திற்கு மருந்து கொடுங்கள்
அருவிகளே
ஏன் கூச்சல்?
மரங்களின்
தூக்கம் கலைகிறது
உங்கள் சத்தத்தால்.
பறவைகளே
நீங்கள்
அரண்மனை கட்டி ஆள
மரங்கள்
அடிமைகள் அல்ல
மனிதர்களே
மரங்களை வெட்டாதீர்கள்
மரமும் - ஓர்
உயிரினம் தான்!

**- ச.சங்கீதா**

இளங்கலை தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நினைவுகள்

தந்தையின் நினைவு உயர்வானது
நட்பின் நினைவு உணர்வானது
காதலின் நினைவு கண்ணீரானது
உறவுகளின் நினைவு வலியானது
பயணங்களின் நினைவு புதுமையானது
பள்ளியின் நினைவு சுகமானது
கல்லூரி நினைவு அர்த்தமானது

**- மஞ்சுளாதேவி**

இளங்கலை தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## எங்கே எனது மரம்?

ஆலமரத்தை தூறி ஆக்கினோம்!
வேப்பமரத்தில் பல் துவக்கினோம்!
பனைமரத்தில் பாலம் ஆக்கினோம்!
வில்வமரத்தை லிங்கம் ஆக்கினோம்
காலமாற்றத்தால் அனைத்தையும்
இழந்தோம்
இன்று கானக ஓவியத்தில் கிளிகள்
பேசுவதில்லை!
தென்றல் வீசுவதும் இல்லை!

**- சா.குணசுந்தரி**

இளங்கலை தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## முடியாது,முடியாது..

கானல் நீரைத்
தொட நினைப்பதும்
வானவில்லைக்
கட்டியணைக்க துடிப்பதும்
சூரியன் முகத்தில்
முத்தமிடத் தவிப்பதும்
தமிழரின்
பண்பாட்டை அழிக்க
நினைப்பதும் ஒன்றுதான்!

**- ப.வசந்தி**

இளங்கலை தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## ஹைக்கூ

மீண்டு வரமுடியாத
ஒற்றை வழிப் பாதை
பிரிவு

**பி.வித்யாதேவி,**

இரண்டாமாண்டு கணினிஅறிவியல் அ-பிரிவு

## சிந்தனை செய் தமிழா..

தமிழர்களே!
வெட்டிக் கொண்டோம்
சேர சோழ
பாண்டியர் படைகளென்று
தமிழர்களே!
வெட்டிக் கொள்கிறோம்
உன் சாதியா? என் சாதியா?
உயர்ந்த தென்று
தமிழனே! மகிழ்கிறாய்
உன்னினத்தை கொன்று
தமிழனே! ஒற்றுமை பெறு
விடியும் நல்ல பொழுது ஒன்று!

**- பெ.காளியப்பன்**
இளங்கலை தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நட்பு

பிரியும் வேலையிலும்
உன் நினைவுகள்
என்னை நினைவு படுத்துகிறது.
நாம் அனைவரும்
சேர்ந்து ஒரு
குடும்பமாய் இருந்தோம்
பல பிரச்சினைகள் வந்தன.
நொடியில் மறைந்த
துன்பங்கள்
ஆனந்தமாய் நீடித்த
நாட்கள்
என் கல்லூரியின்
வசந்தகாலம்.

**- ம.பிரேமா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## வெற்றி

மரத்தின் நிழலில் நின்று கொண்டு
சுகம் காண்பதை விட
வெயிலை எதிர்த்து போராடுவதே மேல்!
மரத்தின் நிழலானது நிரந்திரமல்ல!
சூரியனின் வெயிலே நிரந்திரமானது.
தோல்விகளையேமுகவரியாகக் கொண்ட
உனக்கு வெற்றியின் முகவரியும்
கிடைக்கும் ஒரு நாள்!

**கை.மகிளா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நட்பு

“நீ கோயிலுக்கு அழைத்தபோது
எனக்கு சேர்த்துதான்
நீ வேண்டிக் கொள்ளப் போகிறாயே
என்று நினைத்து
நான் வரவில்லை என்றேன்.
நான் எப்போதும்
உனக்காக மட்டும்தான்
வேண்டிக்கொள்வேன்
எனக்காக என்றால்
நீ வந்து வேண்டு” என்கிறாய்

**ந.வனிதா**
கணிதவியல் இரண்டாமாண்டு –அ பிரிவு

## புகைப்படம்

கல்லூரியின் கடைசி நாளில்
உயரத்தைக் காரணம் காட்டி
உன்னை முன் வரிசையிலும்

என்னைப் பின் வரிசையிலும்
நிற்கச் சொன்ன புகைப்படக்காரர்
எல்லாரையும் சிரிக்கச் சொல்ல
நீ மட்டும் முறைத்துக் கொண்டிருப்பதை
இப்போதும் சிரித்தபடி சொல்கிறது
அந்த புகைப்படம்

**ரா.மோகனப்பிரியா**
கணிதவியல் இரண்டாமாண்டு அ-பிரிவு

## அன்பான நட்பு

பார்த்துக்கொண்டிருக்கும்
நிமிடங்களைவிட
நினைத்துக் கொண்டிருக்கும்
நிமிடங்கள் தான்
அன்பான நட்பு
அதிகமாக இருக்கும்
நண்பனே!
இலட்சியப் பாதை
கற்கள் கால்களைப் பதம்
பார்த்தாலும்
நதிகள் தன் ஓட்டத்தை
நிறுத்துவதில்லை!
கடலில் கலக்கும் வரை
மனிதா!
நீயும் கடிவாளம் கட்டிய
குதிரையாய் - ஓடிப்பார்
உன் இலட்சியப் பாதையில்
உன் இலக்க உன் கையில்
ஜொலிக்கும்
நிலக்கரி பிரித்த வைரமாய்....!

**சி.பவித்ரா,**
முதலாண்டு உயிர்வேதியியல்.

## மரம்

நிழலாய் நின்றாய்
வெயிலின் போது
உணவாய் நின்றாய்
பசியின் போது
பணமாய் நின்றாய்
பஞ்சத்தின் போது
உரமாய் நின்றாய்
உன் இழை உதிர்ந்தும்
உன் கிளை எரிய
என் வீட்டின்
உலைக் கொதித்தது
உன் அழிவை தடுக்க
யாரால் முடியும்?

**ஏ.விக்னேஷ்,**
உயிரி தொழில்நுட்பவியல் ஆ பிரிவு.

## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு மலைப் பாதை
ஏறும் வரை கடினமாகத்தான் இருக்கும்
ஏறி முடிந்த பின்புதான் தெரியும்
நாம் உயர்ந்து விட்டோம் என்று!!!

## புலம்பல்ஸ்

அற்ப துக்கங்கள்
வாய்விட்டுப் புலம்பும்
பெரிய துக்கங்கள்
மௌனமாக இருக்கும்

**ர.சத்யா,**
இரண்டாமாண்டு உயிரிதொழில்நுட்பவியல் ஆ-பிரிவு

## வாழ்க்கைத் தத்துவம்

ஆயிரம் பேரை நண்பராக
வைத்திருப்பது உனக்குப்
பெருமையல்ல...
ஆயிரம் பேர் எதிர்க்கும் போது
உனக்காக அவர்களை
எதிர்க்க கூடிய நண்பன்
ஒருவனை வைத்திருப்பதே
உனக்குப் பெருமையாகும்.

ரொம்ப நல்லவனாக
இருக்க நினைக்காதே
உன்னை நடிகன் என்று
சொல்லிவிடுவார்கள்
அதிகம் அன்போடு நடந்து
கொள்ளாதே..
அடிமையாக்கி விடுவார்கள்
அதிக பொறுமையுடன் நடக்காதே..
பொறுக்கியாக மாறும் வரை
விடமாட்டார்கள்.
எல்லாம் வெளிப்படையாக இருக்க
வேண்டும்
என நினைக்காதே..
பொறாமையால் உன்னை காணாமல்
ஆக்கி விடுவார்கள்
எல்லோரையும் நம்பி விடாதே ....
ஏமாற்றுபவர்கள் நிறைய இருக்கிறார்கள்
கோபப்படாமலேயே இருந்து விடாதே...
கோமாளியாக்கி விடுவார்கள்.
எதிர்பார்க்கும்போது
நல்ல நண்பர்கள்
கிடைப்பதில்லை
நல்ல நண்பர்கள் எதையும்
எதிர்பார்ப்பதில்லை.

**என்.ஹேமலதா,**
முதலாண்டு உயிர்வேதியியல்

## உனக்காக ஓர் இதயம்

உனக்காக துடித்த ஓர் இதயம்
உனக்காக மட்டுமே துடித்த இதயம்
ரத்தத்தை உணவாய் மாற்றிய
ஓர் இதயம்
அதை உனக்காக பரிமாற்றிய
ஓர் இதயம்
நீ கேட்ட தெல்லாம் கொடுத்த
ஓர் இதயம்
செய்த சேட்டையல்லாம் பொறுத்த
ஓர் இதயம்
இன்று துடிக்கிறது
இன்றும் கூட துடிக்கிறது
முதியோர் இல்லத்தில்
என் மகன் எப்படி இருக்கிறானோ
என நினைத்து...

**சி.சூர்யா,**
இரண்டாமாண்டு உயிரிதொழில்நுட்பவியல் ஆ-பிரிவு

## நட்பு

ஒரு மனதாய் வந்தேன்
உன் நட்பு கிடைத்ததும்
இரு மனதாய் ஆனேன்
நிழலாய் வந்தேன்

உருவாய் மற்றினாய்
உன் நட்பு கிடைக்காவிட்டால்
நான் இன்னும் உருவம்
இல்லாத நிழலாய்தான்
காத்திருப்பேன்
ஆயிரம் பேர்
என்னைச் சுற்றி இருந்தபோது
என் இன்ப துன்பங்களில்
பங்கு கொண்டவள் நீ.

**அ.திவ்யா**
இரண்டாமாண்டு கணிதம் - 'ஆ' பிரிவு

## அம்மா

என் திங்களும் நீ! என் தித்திப்பும் நீ!
என் செவ்வாயும் நீ!
என் செங்கரும்பும் நீ!
என் புதனும் நீ! என் பூதேவியும் நீ!
என் வியாழனும் நீ! என் விடியலும் நீ!
என் வெள்ளியும் நீ!
என் வெளிச்சமும் நீ!
என் சனியும் நீ! என் சாமந்தியும் நீ!
என் ஞாயிறும் நீ!
என் ஞாபகமும் நீ! அம்மா?
கலப்படம் சிறிதும் இல்லாத அன்பு
தாயின் அன்பு!
அதற்கு இணையான அன்பு
வேறில்லை.

**எம்.தமிழ்செல்வி**
கணிப்பொறி அறிவியல் முதலாமாண்டு சி-பிரிவு

## கண் தானம்

நாம் வாழும் வாழ்க்கை
நிலையில்லாதது – அதில்
உயிரும் ஒன்று.
வண்ணங்கள் பார்த்து நம்மோடு
வாழ்ந்த கண்களுக்கு
நாம் இறந்தபின் நம்மோடு
இருண்டு போக
விடலாமா?
வண்ணங்களை பார்க்காதவர்களுக்கு
வண்ணங்களை பார்க்க
நம் கண்களை மீண்டும் மீண்டும்
ரசித்து வாழ
கண் தானம் செய்வோம்...

**ச.நந்தினி**
இளங்கலை தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## ஆசிரியர் (பாடல்)

ஆசிரியர்கள் வாரீர்
இந்த நேரத்தை எமக்குத் தாரீர்!
உங்கள் விழவைக் கொண்டாட வாரீர்!
உங்கள் சேவை கண்டு
வியந்து போகிறோம்
ஒரு மொழி இல்லாமல்
மௌனம் ஆகிறோம்
படைத்தார் இறைவன் உங்களை
எமக்காய் அளித்தார் அவரே
உம்மிடம் இருக்கும் திறமையெல்லாம்
அள்ளி எமக்கு வழங்கினீரே
விடிய விடிய படித்து யாவும்

உமக்கு பெருமை சேர்த்தோமே
உம் புகழ்
வையகம் சொல்ல பாடினோம்
ஒன்றாய் சேர்ந்து புகழை.
நீங்கள் என்றும் வாழ்க பல்லாண்டு!

**அ.பிரவீனா**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## காளைகளின் கண்ணீர் பேச்சு

நாங்கள் துள்ளி விளையாடும்
மைதானம் எங்கே?
எங்களை அடக்க வரும் வீரர்களின்
பெரும் கூட்டம் எங்கே?
வருடம் முழுவதும் பயிற்சி கொடுத்த
அதற்கான பலன் எங்கே?
இன்றாவது வாய்ப்பு கிடைக்குமா? என்று
வாடி வாசலை பார்க்கும்
காளைகள் மட்டும்தான் இன்றும்
இங்கே இங்கே....!

**ரா.யுவராஜ்**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## முரண்பாடு

பனித்துளி படர்ந்த
ரோஜா இதழ்களில்
இதயம் உறையவைக்கும்
இரத்தத்துளிகள்!
புல்லாங்குழலின் மெல்லிய நாதத்தில்
புகுந்து கொண்டு சாவுமேளம்
கங்கை நீரின் கழிவுகளாய்
அழுகிப் போன பிணங்கள்
இயற்கையின் இயற்கை வெட்டியதால்
இழந்து விட்ட உயிர்வரம்
மழலையின் மலர்கரத்தில்
திணிக்கப்பட்ட துப்பாக்கிகள்
கற்பனையை காசாக்கி
விற்பனை செய்யும் வித்தகர்கள்
வரைமுறைகளை காணும்
வகையற்ற நெறிமுறை
முரண்பாடுகளுக்கு முடிசூட்டி
வெள்ளி விழாக்காணும் மூடத்தனம்
முறை தவறிய மனித மனங்களுக்கு
மூடு விழா காண்பது எப்போது?

**க.கவின்குமார்**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## வாழ்க்கை

நீ வெளிச்சத்தில் நடந்தால்
உலகம் உன்னை பின் தொடரும்
நீ இருட்டில் நடந்தால்
உன் நிழல் கூட
உன்னை பின் தொடராது!
தோல்விகள் அனைத்தும்
பாடம் சொல்லும் பள்ளிக்கூடம்.
நிழல் நிலையானது அல்ல
நிஜமே நிலையானது
ஆதலால் நிழலில் சாய்வதை விட
நிஜத்தில் காய்வதே மேல்.
எண்ணங்களுக்கு சருகையும்
மலரவைக்கும் சாமார்த்தியம் உண்டு
என்பதை உணர்ந்து கொள்..
கஸ்டங்கள் வரும்போது
ஆறுதல் சொல்ல

சிலர் இருப்பதால்
நம் வாழ்க்கை அடுத்தக்
கட்டத்தை நோக்கி
பயணம் செய்கிறது.
நிலவின் குளிர்படுக்கையில்
உறங்குவதைவிட..
சூரியனின் வெப்பப்படுக்கையில்
உறங்கிப்பழகு...
அப்போதுதான் உரிய நேரத்தில்
விழித்துக் கொள்ள முடியும்
வாழ்க்கை என்னும் கடலில் நீந்தி
இலக்கு என்னும் படகை அடைந்து
வெற்றி என்ற
கரையை சேர வேண்டும்...

**எம்.தமிழ்ச்செல்வி**
கணிப்பொறி அறிவியல் முதலாமாண்டு- சி' பிரிவு

## நதிகளை குளிப்பாட்டுவோம்

இடித்தவன் அழட்டும்
இடித்ததற்காக!
வெடித்தவன் அழட்டும்
வெடித்ததற்காக
இருவராலும் அழுதவர்கள் இப்போது
இருவருக்காகவும் அழட்டும்
அந்தக் கண்ணீரில் நதிகள்
கழுவிக் கொள்ளட்டும்
தம்மீது படிந்த
இறத்தக் கறைகளை..!

**ச.தமிழ்ச்செல்வி**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## வாழ்வு

சாதனைக்காக வாழ்வதல்ல வாழ்க்கை
சாதித்து வாழ்வதுதான் வாழ்க்கை
கோடி நாள் வாழ்வதல்ல வாழ்க்கை
கோடி உள்ளங்களில்
வாழ்வதுதான் வாழ்க்கை
ஆடம்பரமாக வாழ்வதல்ல வாழ்க்கை
தர்மமாக வாழ்வதுதான் வாழ்க்கை
தனக்காக வாழ்வதல்ல வாழ்க்கை
தாய்மண்ணுக்காக
வாழ்வதுதான் வாழ்க்கை
நேசத்துக்காக வாழவதல்ல வாழ்க்கை
தேசத்துக்காக வாழ்வதுதான் வாழ்க்கை''

**ஜே.ஸ்வாதி**
கணினி அறிவியல் முதலாமாண்டு

## ஒரு பழமொழி உதிர்கிறது

கடந்த ஆண்டு நடந்த
கலவரத்தில்
அடிபட்டு ஓடிவந்த
அமாவாசை உயிருக்கு
அடைக்கலம் கொடுத்தான்
அப்துல்காதர்.
மறுபடி நடந்த மதக்கலவரத்தில்
அரை உயிராய் ஓடிவந்த
அப்துல்காதரைத் தன் குடிசைக்குள்
ஒளித்து வைத்து உயிர்காத்தான்
அமாவாசை
இப்போதெல்லாம் அந்த கிராமத்தில்
எவருமே கேட்பதில்லை
அப்துல்காதருக்கும் அமாவாசைக்கும்
என்ன சம்பந்தம் என்று...!

**ப.வசந்தி**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.

## வாழ்க்கையின் வலி

வாழ்க்கையின் முதல்பக்கம் கருவறை
கடைசிப்பக்கம் கல்லறை
ஆனால்
நடுவில் இருக்கும் பக்கங்களைப்
புன்னகையில் எழுதுங்கள்
கண்ணீரால் அழித்து விடாதீர்கள்.

## நட்பு

ஆயிரம் விண்மீன்கள்
**வானில்** இருந்தால்
அது நிலவுக்கு அழகுதான்
ஆயிரம் உறவுகள்
மண்ணில் இருந்தாலும்
நம் நட்புக்கு என்றும் அழகு.

## இலட்சியம்

நிலா தூரம் தான்
அதில் காலடி வைக்கும் வரை
சிகரம் உயரம் தான்
அதன் உச்சியை அடையும் வரை
சூரியன் வெப்பம் தான்
அது மறைந்து போகும் வரை
அது போல
நம் இலட்சியம் கடினமே
அதில் வெற்றிபெறும் வரை.

**கே.சுரேஷ்,**
இரண்டாமாண்டு உயிரிதொழில்நுட்பவியல்ஆ-பிரிவு.

## முயற்சி

இளைஞனே! இன்பம் மட்டுமே கண்டு
இன்னல்களை கண்டவர் பலபேர்.
துன்பம் காணாமல்
துயரம் கண்டவர் பலபேர்.
ரோஜாவில் முள் உள்ளது என்று
முடங்கி விடாதே!
முள்ளிலும் ரோஜா உள்ளது
என்று எண்ணி ஏமப்புறு!
முயற்சியில் தோல்வி கண்டவர்
90 பேர் என்றாலும்
தோல்வியிலும் முயற்சி கண்டு முதல்
மனிதனாய் வா!
தோல்விக்கு போடு படிக்கட்டு
வெற்றி எனும் பாதையில்
அடிக்கல் நாட்டு
முடியும் என்றால் முயற்சி செய்
முடியாது என்றால் பயிற்சி செய்
சோதிக்க வந்தவந்தான் கடவுள்!
சாதிக்க பிறந்தவந்தான் மனிதன்
முயற்சி செய் இளைஞனே!
நாளை நம் கையில்! சரித்திரம் உன்
சட்டைப்பையில்
நீபோகும் பாதையில் போடு விதையை
உலகமே கேட்கும் உன் கதையை

## காலம்

புரியாத புதிர்! கண்ணுக்குப் புலப்படாத
சூரியக் கதிர்
நடந்து செல்லும் கால்களுக்கு தூரம்
கடந்து செல்லும் கண்களுக்கு பாரம்

எனக்கும் வந்தது ஒருநாள் ஆர்வம்
காலத்தை கடக்க வேண்டுமென்று
ஆனால் பாவம்
காத்துக்கொண்டிருக்கிறேன் வெகுகாலம்
காலத்திற்கு காட்டினேன் ஒரு பாலம்
மிஞ்சியதோ ஏமாற்றம்!
காலத்திடம் கேட்டேன் ஏன் என்னால்
உன்னை அடைய முடியவில்லை என்று!
காலம் சென்னது
இறந்த காலத்தை இழுவு படுத்தாமல்
நிகழ்காலத்தை நினைத்துப் பார்!
எதிர்காலம் உனக்கு எழுந்தது நின்று
மரியாதை செலுத்தும் என்று
கனவு கலைந்தது! விழிப்பு வந்தது
அருகில்
அம்மாவின் கதறல் சத்தத்துடன்
காத்துக் கொண்டிருந்தது காபி!
எருமை மாடே! எழுந்திரு.

**பிரியதர்ஷினி**
இளங்கலை தமிழ் இரண்டாமாண்டு.

## கோபம்

"கடலின் கோபம் சுனாமி
மழையின் கோபம் வெள்ளம்
எரிமலையின் கோபம் பெரும்வெடிப்பு
காற்றின் கோபம் புயல்
விலங்குகளின் கோபம்
தன் இனத்தை அழித்தல்
மனிதனின் கோபம்
தன்னையே அழித்தல்"

**கை.மகிளா,**
இளங்கலை தமிழ் முதலாமாண்டு.

## மெல்லத் தமிழ் இனி

"மெல்லத் தமிழ் இனி...
கையேட்டில் இருந்து கைப்பேசிக்கு
மாறியது என் தமிழ்
இனி உள்ரில் இருந்து உலக
அளவில் பறந்து நிற்கும்
ஓராயிரம் ஓலைச் சுவடிகளில்
இருந்த அறிவுச் செல்வம்
இன்று ஒருக்கைப்பிடியில்
அடங்கிவிட்டன
மின் அணு உலையில்
மின்மினிப் பூச்சியாய் இருந்த
என் தமிழ் ஒளி மின்னல்
கீற்றாய் இனி உயிர்த்தெழும்
எந்திர உலகின் தந்திரமாய்
பல சூழ்ச்சிகள் இருந்தபோதும்
தமிழ் என்னும் மந்திரச் சொல்
மட்டும் என்றும் நிலைத்திருக்கும்
அன்று தமிழில் பேச
தயங்கிய இளைஞர் கூட்டம்
இன்று இணையதளத்தில்
இணைகிறது தமிழால் - தமிழ்
இனி மெல்லச் சாவும்
என கூறியவர்கள் பலர்
ஆனால் நான் உரக்கச் சொல்லுவேன்
தமிழ் இனி உயிர்த்தெழும்"

**க.சௌந்தர்யா,**
முதலாமாண்டு கணினி பயன்பாடு அ-பிரிவு

# சிறுகதை

## தாய்ப்பாசம்

காகம் தன் குஞ்சுக்கு இறக்கைகள் முளைத்ததும் பறக்கும் பருவம் அடைந்ததும் பயிற்சி அளிக்க முடிவெடுத்தது. அன்று காலை மரத்தை ஒட்டியப் பகுதியில் பயிற்சி அளித்தது. அவ்வழியாக வந்த குறவன் காக்கை குஞ்சைக் கண்டான் நம் பையனுக்கு இதை பொரியல் செய்து கொடுத்தால் நன்றாக இருக்குமே என்று மரத்தடியில் பறக்க முயற்சித்துக் கொண்டிருந்த குஞ்சைப் பிடித்து கொண்டு நடந்தான்.

இதை கண்ட தாய் காகம். தன் குஞ்சு பறிபோவதைக் கண்டு கா... கா... கா... என்று ஓலமிடத் தொடங்கியது.

குறவட்னா எந்தத் குரலுக்கும் இறங்காத கல்நெஞ்சனாக நடந்து கொண்டிருந்தான் காகமோ அவன் பின்னாலேயே கத்திக் கொண்டு பறந்து சென்றது.

குறவன் வீட்டுக்கு எதிரே இருந்து மரத்தின் மேல் அமர்ந்து பயங்கரமாக கத்தியது. அதற்கு துணையாக பல காகங்கள் கூடி கரைந்தன.

குறவன் தன் மனைவியை தனது நம்ப பையனுக்கு பொரியல் செய்து கொடு என்றான். அதை வாங்கிக் கூடையில் கவிழ்த்து வைத்தான்.

குறவன் மகன் வீட்டிற்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்தான். காகம் கத்துவதைக் கண்டு வீட்டுக்கு வந்த அவன் நடப்பதை அறிந்து மிகவும் வேதனைப்பட்டான்

இந்தக் குஞ்சை இதன் தாயிடம் ஒப்படைப்பதே தர்மம். நான் ஒரு முறை இதே காட்டில் தொலைந்தபோது என் அப்பாவும், அம்மாவும் எப்படி துடிச்சாங்க.

அதே வேதனை தானே இதன் தாய்க்கும் இருக்கும். நானாவது திரும்பி வந்து விட்டேன்.

இந்த காக்கைக் குஞ்சை இவர்கள் கொன்று சமைத்து விட்டால் அதன் தாய் எவ்வளவு வேதனை அடையும்?

அதை நாம் அனுமதிக்கக் கூடாது என முடிவு செய்தான்.

அம்மா, காகங்கள் எல்லாம் இந்த குஞ்சிற்காகத்தானே வெளியே கத்திக் கொண்டு வட்டமிடுகின்றன. எனக்கு இது வேண்டாம் என்றான்.

அதுகள் அப்படித்தான் கத்தும் உனக்கு காக்கா கறி சாப்பிட்டால் உடம்பில் தெம்பு கூடும்.

நோய் வராது. அதான் அப்பா க்'டப்பட்டு கொண்டு வந்து இருக்கிறார் என்றாள் அவனது தாய்.

அம்மா உனக்கு மகன் மீது உள்ள பாசத்தில் காக்கைகளின் பாசம் புரிய மாட்டேன் என்கிறதோ? அது பாவம் அம்மா வேண்டாம் என்று கெஞ்சினான்.

உனக்கு ஒன்றும் தெரியாது போய் விளையாடிவிட்டு வா. அம்மா சமைத்து

வைக்கிறேன் என்றபடி சமையறைக்குள் நுழைந்தாள் தாய்.

அம்மா காக்கை குஞ்சை விடமாட்டாள் என்பது தெரிந்து போன அவன் அம்மா திரும்பி வருவதற்குள் காக்கை குஞ்சை எடுத்துக் கொண்டு தெருவுக்கு ஓடினான். காக்கைகள் அவனை வட்டமிட்டுக் கொத்தின. அவன் காக்கை குஞ்சை மரத்தில் விட்டதும் அத்தனை காக்கைகளும் தூக்கிக் கொண்டு பறந்து விட்டன.

காக்கைகளிடம் கொத்து வாங்கிய அவன் வீட்டிற்குள் சென்றான். அவனது தாய் அழுதபடி மருந்து போட்டாள்.

நான் காணாமப்போனபோது நீ எத்தனை நாள் காய்ச்சலில் கிடந்தே? இப்போ காயம் பட்டதும் எப்படி துடிக்கிற?

அதுபோலத்தானேம்மா அந்த காகங்களும் வருந்தும். அதுகள் எல்லா வருத்தப்படும். அதான் விட்டேன். என்று காயத்தை மறந்து சிரித்தான் அவன். அம்மா அவனை அணைத்துக் கொண்டாள்.

**மு.பிரபு,**
முதலாண்டு உயிர்வேதியியல்.

## என் உயிர் தோழி

அன்று காலாண்டு தேர்வு முடிவு. விடுமுறை விட்டார்கள். பின் பத்து நாட்களுக்குப் பிறகு மீண்டும் பள்ளி திறந்தது. வாணியும், பவித்ராவும், நல்ல நண்பர்கள். ஆனால் பவித்ரா மட்டும் வாணி மீது பொறாமை. ஏனென்றால் வாணி நன்கு படிக்கும் மாணவி. அனைவரிடமும் நன்கு பழகும் குணம். ஆனால் அது பவித்ராவுக்கு பிடிக்கவில்லை. வாணி பள்ளியில் செய்யும் சிறு தவறுகளையும் அவள் அம்மாவிடம் சொல்லி அவளுக்க திட்டும், அடியும் வாங்கித் தருவாள். ஒரு நாள் பவித்ரா "என்னுடன் நீ தோழியாக இருக்க வேண்டும் என்றால் இனி அதிக மதிப்பெண் எடுக்கக் கூடாது என்றாள். இனி என்னை விட குறைவாகத்தான் எடுக்க வேண்டும் என்றாள். வாணி தன் நட்பின் மீது கொண்ட பற்றால் பவித்ரா சொன்னபடி நடந்தாள் அதனால் அவள் வாழ்க்கை தொலைந்தது. ஒரு நாள் பவித்ரா, வாணி அம்மாவிடம் வாணியைப் பற்றிக் குறை கூறிக்கொண்டிருந்ததை வாணியின் மற்றொரு தோழி பார்த்து விட்டாள். உடனே அதை வாணியிடம் கூறினாள். வாணி மிகவும் மன உளைச்சலுக்கு ஆளானாள். தேவி வாணியிடம் நீ பவித்ராவின் அம்மாவிடம் போய் சொல்லு. உங்கள் பிள்ளை என்னைப் பற்றி என் அம்மாவிடம் குறை கூறுகிறாள் என்று சொல்லு. ஆனால் வாணி, "அவள் செய்த தவறை நான் செய்து என் நட்பை கலங்கப்படுத்த விரும்பவில்லை" என்றாள். பின் அவளை விட்டு விலகி படிப்பில் கவனம் செலுத்தி பனிரெண்டாம் வகுப்பில் மாநில அளவில் நல்ல மதிப்பெண் எடுத்தாள். பின் கல்லூரியில் சேர்ந்தாள்

படிக்கும் போது திவ்யா என்ற ஒரு பெண் இவளை தேடி வந்தாள். இவளுடன் நட்பாக இருந்தாள். எதையும் இருவரும் விட்டுக் கொடுத்து போனார்கள்.

இருவரும் சேர்ந்து ஒரு ஆராய்ச்சி நடத்தினர். வாணிக்காக 'திவ்யா நான் உனக்கு ஓர் உதவியாளராக இருந்தால் போதும்' என்றாள். வாணி செய்த ஆராய்ச்சி பெரிய வெற்றியை தந்தது அந்த ஆராய்ச்சிக்கு நான்கு விருது வழங்கப்பட்டது. இறுதியில் உலக அளவில் நடந்த கண்காட்சியில் வாணியின் ஆராய்ச்சிக்கு உயர்ந்த விருது வழங்கப்பட்டது. அந்த தருணத்தில் வாணி, இந்த புகழ் எல்லாம் என் உயிர் தோழி திவ்யாவை சேரும். அவள் எனக்கு கிடைத்த தெய்வம். அவள் இல்லையெனில் இதை என்னால் இந்த வெற்றியைப் பெற முடிந்திருக்காது. எனக்காக எல்லாத்தையும் விட்டுக் கொடுத்தாள். எனக்குக் கிடைத்த தோழிபோல் யாருக்கும் கிடைத்திருக்காது. இறுதியாக, "நட்பு என்பது நல்ல ஓர் துணை. ஆனால் அதில் பொறாமை இருக்கக் கூடாது. விட்டுக் கொடுக்கும் தன்மை இருக்க வேண்டும்" என்றாள்.

**என்.ஹேமலதா,**
முதலாண்டு உயிர்வேதியியல்

## தேவதை

இளவரசிக்கு 18 வயது ஆகிவிட்டது. அவள் அத்தை அவளிடம் இனி விளையாட்டாக இல்லாமல் உனக்கு இருக்கும் பொறுப்பை தெரிந்து கொள் என கடுமையாக சொன்னாள். இளவரசிக்கோ சுதந்திரமாக இருக்கனும் என ஆசை அவளுக்கு பாடுவதில் விருப்பம். ஆகையால் அந்த ஊரில் புகழ் பெற்ற பாடகியிடம் நட்பு கொண்டால், இளவரசிக்கு முடியை மாற்றும் மந்திர சீப்பு உள்ளன. அதே போல் பாடகிக்கு உடை மாற்றும் மந்திர கொண்டவள். இதில் இருவரும் ஒரே மாதிரியாக முகம் கொண்டவர்கள். பாடகிக்கு இளவரசியாக இருக்கனும் என ஆசை. இருவரும் பேசிக் கொண்டு பாடகி இளவரசியாகவும், இளவரசி பாடகியாகவும் மாறினர். அப்போது அரண்மனையில் வைரம் பூக்கும் செடி உள்ளன. அதை திருட இருவரும் வந்தனர். இளவரசியை (பாடகி) ஓர் அறையில் அடைத்தனர். பாடகி (இளவரசி) அன்று பெரிய விழாவில் பாட வேண்டிய நிலை. அந்நிலையில் இளவரசிக்கு மத்தியில் பாட தயங்கி நின்றபோது தோழியை நினைத்து தைரியமாகப் பாடினாள். அவளுக்கு பாராட்டுகளும், கைதட்டும் கிடைத்தன. திருடர்கள் செடியை திருடி விட்டதால் அந்த ஊரில் செடி, கொடி வாடிவிட்டன. இதைக் கண்ட இளவரசி (பாடகி) உடனே அரண்மனை சென்று தன்

தோழியைக் காப்பாற்றி இரண்டு பேரும் திருடனைப் பிடித்தனர். பின்பு இளவரசியும் பாடகியும் திரும்ப பழைய நிலைக்கு திரும்பினர். இந்தக் காட்சிகள் தேவதையின் கனவிலும் கூட தோன்றின.

**செ.சௌந்தரி,**
இரண்டாமாண்டு கணினி அறிவியல், ஈ பிரிவு

## நீதி

ஓர் அழகிய கிராமத்தில் ஒரு தம்பதியினர் குதிரையில் சவாரி செய்தனர். அதைப் பார்த்த இருவர் பாவம் குதிரை எப்படி இருவரை சுமக்கும். இவர்களுக்கு அறிவே கிடையாது! என்றனர்.

இதனைக் கேட்ட கணவர் மனைவியை இறங்கி நடக்க விட்டு, அவர் குதிரையில் சென்றார். அதைப் பார்த்த மற்ற இருவர் இவன் ஆணாதிக்கம் பிடித்தவன் போலும், மனைவியை நடக்கவிட்டு, இவன் சுகமாக குதிரையில் செல்கிறான் என்றனர்.

இதையறிந்த கணவர் தான் இறங்கிக்கொண்டு மனைவியை குதிரையில் சவாரி செய்ய விட்டார். இதனைப் பார்த்த வேறு இருவர் இந்தப் பெண்ணிற்கு பண்பாடு தெரியவில்லையோ? கணவன் நடக்க இவள் சுகமாக சவாரி செய்கிறாளே! எனும் சொற்களைக் கேட்டு வருத்தமடைந்தனர்.

ஆதலால் இருவரும் குதிரையைக் கையில் பிடித்துக் கொண்டு நடந்து சென்றனர். இக்காட்சியைக் கண்ட இருவர், இவர்கள் என்ன முட்டாள்களா? இவ்வளவு திடமான குதிரையை வைத்துக் கொண்டு சுகமாக சவாரி செய்யாமல் நடந்து செல்கின்றார்களே! என்றனர்.

**நீதி:** நாம் என்ன செய்தாலும் இவ்வுலகம் குறை கூறிக் கொண்டுதான் இருக்கும். ஆதலால் இவ்வுலகத்தில் உள்ளோர் சொல்லைக் கேட்காமல் உன் உள்ளம் சொலலும் சொல்லைக் கேட்டு நட. அதுவே உன் வெற்றிக்கு வழிவகுக்கும்.

**எஸ்.கே.தினேஷ்**
இரண்டாமாண்டு உயிரிதொழில்நுட்பவியல்,ஆ-பிரிவு

## தானத்தில் சிறந்தது நிதானம்

திடீர் என்று மருத்துவ மனையில்
இருந்து அழைப்பு வரச் சென்றான் சிவா.
அங்கு ஒரு பெண்
எல்லோரிடமும் இரத்ததானம் கேட்டுக்
கொண்டிருந்தாள்.
யாரும் தானம் தர முன் வரவில்லை.
இவனிடம் வந்து கேட்டாள்.
அதற்கு இவன் ஏன் நீங்க எல்லாம்
தரக்கூடாதா உபதேசம் ஊருக்குத்தானா
என்று கேட்டு விட்டு மருத்துவரைப்
பார்க்கச் சென்றான். தன் தாயின்
உடல் நிலை கருதி,

டாக்டர் ஏ அம்மாவுக்கு எப்படி இருக்கு அதெல்லாம் ஒன்னுமில்ல. லேசான மயக்கம். அவ்வளவுதான். நீங்க கூட்டிட்டு போகலாம்.

தன் அம்மாவுக்கு அறிவுரை கூறியபடி வந்து கொண்டிருக்க அப்போது அந்தப் பெண் எதிரே வர, நிமிர்ந்த இவன் அம்மா, "என்னம்மா சாந்தி கெடைச்சுதா என்று கேட்க அவள் இல்லம்மா கெடைக்கல வருத்தத்தோடு கூற சிவா நீ விபத்துல சிக்கியபோது ஒனக்கு இரத்தம் கொடுத்து காப்பாத்தினது இவங்கதாம்பா என்றதும் அவன் அதிர்ச்சியுற்றான்.

இதை அறிந்த அந்தப் பெண் ஆகா இவர்தான். இவர் வண்டி ஓட்டுறதுலதான் வேகம்னா, வார்த்தையிலும் ரொம்ப வேகம் தான் நன்றி நான் வர்றேன் என்று சென்றதும் சிந்தித்தான் சிவா. "தானத்தில் சிறந்தது இரத்ததானம்" அதை விட சிறந்தது நிதானம். பேச்சிலும் சரி செயலிலும் சரி நிதானம் அவசியம் என்பதை உணர்ந்தான்.

## நீண்ட நாள் பசி

உள்ளே இருந்த அந்தப் பெரியவர் யார் என்று வெளியே வர அங்கே ஒருவன் உங்கள பாக்கத்தான் வந்தேன் என்று கூற உள்ளே அழைத்துச் சென்று என்ன விசயம் என்று கேட்க, அவன் பையில் இருந்த திருமண பத்திரிகையை எடுத்து நீட்ட அவர் நீ யாருன்னே தெரியாது நான் இதை எப்படி வாங்குவது என்று கேட்க அதைப் பிரித்துப் பாருங்கள் உங்களுக்கே புரியும் என்று அவன் கூறியதும், படித்தவர் வெகுநேரமாக வெகுதூரம் தனிமையில் பேசிக் கொண்டிருந்தனர்.அப்போ அவன் எல்லோரும் எப்படி இருக்காங்கன்னு கேட்டீங்க, ஒங்க மனைவி எப்படி இருக்காங்கன்னு கேட்கலையே என்று கேட்க,அது நான் கடந்து போனது கேட்க தேவை இல்லை என்றதும், சரி என் அம்மாங்கற முறையில கேட்கலாமில்ல என்று கேட்டதும், திடுக்கிட்டார் அந்தப் பெரியவர். மூன்று மாத கரு பேசுகிறது என்று எண்ணி கண்கலங்கினார். பின் நிதானித்து நல்லா இருப்பா, என்று வாழ்த்திச் சொல்ல அப்போ கல்யாணத்துக்கு வரமாட்டீங்களா என்று பேச்சில் குருக்கிட்டு கேட்க. எங்கிருந்து வாழ்த்துகிறோம் என்பது முக்கியமில்ல எப்படி வாழ்த்துகிறோம் என்பதுதான் முக்கியம்.

நீ எங்க இருந்தாலும் நல்லா இருப்பா நல்லா இரு என்று மீண்டும் வாழ்த்திச் சொல்ல.'அப்பா' என்றதும் திடுக்கிட்டு நின்றார்.நீண்ட நாள் பசிப்பா, ஒரு தடவையாவது அப்படி கூப்பிடலாம்ல என்று ஆவல் கலந்த ஏக்கத்தோடு கூப்பிட்ட மகனை பார்த்த அவர் வாரி அணைத்து உச்சி முகர்ந்தார்.

**மு.பொற்கொடி,**
இரண்டாமாண்டு உயிரிதொழில்நுட்பவியல்,ஆ-பிரிவு

கட்டுரை

## தலைவர்களின் மொழி

உலகத்தலைவர்கள் என்ன மொழியில் பேசுகிறார்கள்?



**ஏஞ்சலா மெர்கெல் (Angela Merkel), ஜெர்மன் அதிபர்:** வேதியியல் அறிஞரான மெர்கெல் ஜெர்மனியின் முதல் பெண் அதிபர். தாய் மொழி ஜெர்மன். பள்ளியில் படிக்கும் போதே ரஷ்யனிலும் ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றார். தனது ரஷ்ய மொழிப்புலமைக்குப் பரிசாக இளம்வயதிலே மாஸ்கோவை சுற்றிப்பார்க்கும் வாய்ப்பைப் பெற்றார். ரஸ்ய அதிபர் புதினுடன் மிக இயல்பாக ரஷ்ய மொழியில் தொடர்பு கொள்கிறார். ஜெர்மனியில் அவரது உரைகள், உரையாடல்கள் முழுக்க முழுக்க ஜெர்மன் மொழியில் இருக்கும். மெர்கெல் பொதுவிடங்களில் ஆங்கிலத்தில் உரையாற்றுவது அரிது.கடந்த ஆண்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஆற்றிய ஆங்கில உரை குறிப்பிடத்தக்கது. மெர்கெல் பேசும் மொழியை விட அவரது உடல் மொழி (body language) ஜெர்மன் மக்களிடையே பிரபலம். கைகளின் விரல்களை இதய வடிவில்/நாற்கர வடிவில் இணைக்கும் சைகை 'மெர்க்கெல் நாற்கரம்' (Merkel Raute / Merkel rhombus) என்று ஜெர்மன் மக்களிடம் முத்திரை பதித்துள்ளது.



**ஃபிரான்ஸொய்ஸ் ஹோல்லன்டி** (François Hollande), **பிரான்ஸ் அதிபர்**: பிரெஞ்சு மொழியிலும் ஆங்கிலத்திலும் புலமையுடையவர். "நான் ஒரு பிரெஞ்சுக்காரரைப் போன்று தான் ஆங்கிலம் பேசுவேன்" என்று தன்னுடைய ஆங்கில உச்சரிப்பைக் குறிப்பிடுவார். இவரது

ஆங்கிலப்புலமை முன்னாள் பிரெஞ்சு அதிபர் நிக்கோலஸ் சர்கோசியை விட சிறப்பாக இருந்தாலும், பிரான்ஸ் கடைபிடித்துவரும் "பிரெஞ்சு அதிபர் பிரெஞ்சு மொழியில் தான் பேச வேண்டும்" என்பதில் உறுதியாக இருக்கிறார். 2012 இல் ஒபாமாவுடனான சந்திப்பில், மொழிபெயர்ப்பாளர் உதவியுடன் முழு உரையாடலையும் பிரெஞ்சில் தான் நிகழ்த்தினார். இறுதியில் ஒரு நகைச்சுவை துணுக்கை மட்டும் ஆங்கிலத்தில் கூறினார். அப்போது ஒபாமாவின் முகம் மிகவும் பிரகாசமானதுமதே போன்று அமெரிக்க தேர்தலில் இரண்டாவது முறையாக வென்ற ஒபாமவிற்கு 2012இல் அனுப்பிய வாழ்த்து மடல் முழுமையாக பிரெஞ்சு மொழியில் தான் இருந்தது. ஆனால் இறுதியில் friendly என்றே ஆங்கிலத்தில் எழுதி கையெழுத்து இட்டார்.



**டேவிட் கேமரூன் (David Cameron), இங்கிலாந்து பிரதமர்**: டச்சு, ஜெர்மன், பிரஞ்சு, ஸ்பானிஷ், ஆங்கிலம் ஆகிய ஐந்து மொழிகளில் உரையாடும் ஆற்றல் பெற்றவர். இவரது தாய் டச்சு மொழி பேசுபவர், மனைவி ஸ்பானிஷ் மொழி பேசுபவர். எதிர்காலத்தில் பன்னாட்டு உறவுகளுக்கும், வாணிபத்திற்கும் பன்மொழிப்புலமை அவசியம் என இளைய தலைமுறைகளிடன் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். "ஒருவருடன் (ஏதோ) ஒரு மொழியில் பேசும்போது நீங்கள் சொல்லும் கருத்து அவரது மூளைக்குச் செல்கிறது, ஆனால் அதை அவரது (தாய்) மொழியில் சொல்லும்போது அக்கருத்து அவரது இதயத்திற்குப் போகிறது" என்னும் நெல்சன் மண்டேலாவின் மொழிச் சிந்தனையோடு ஒன்றிணைந்தவர்.



**விளாடிமிர் புடின் (Влади́мир Пу́тин), ரஸ்ய அதிபர்**: ஜெர்மன், ரஷ்யன், ஆங்கிலம் ஆகிய


மொழிகளில் உரையாடுவார். பொது அரங்கில் அதிகமாக ஆங்கிலம் பேசுவதில்லை. ரஷ்யனிலும் ஜெர்மனிலும் புலமையுண்டு. ரஷ்ய மொழியில் சிறந்த பேச்சாளர். ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கலும் புடினும் சந்திக்கும் போது இருவரும் ஜெர்மனிலும், ரஷ்யனிலும் மறிமாறி உரையாடுவார்கள்.



**நரேந்திர மோடி (નરેંદ્ર મોદી), இந்திய பிரதமர்**: தாய்மொழி குஜராத்தி. குஜராத்தி, இந்தி, ஆங்கிலத்திலும் உரையாடுவார். இலங்கையின் முன்னாள் அதிபர் மகிந்திர ராஜபக் ஷேவுடனான சந்திப்பில், ராஜபக் ஷே ஆங்கிலத்தில் பேச, மோடி முழுக்கமுழுக்க இந்தியில் தான் பேசினார். ஆங்கிலத்திலிருந்து இந்தியில் மொழிபெயர்க்க மொழிபெயர்ப்பாளர் யாரையும் பயன்படுத்தவில்லை. ஆனால் மோடியின் இந்தி உரையாடல் ராஜபக்ஷேவுக்கு உரைபெயர்ப்பாளர்/ மொழிபெயர்ப்பாளர் (interpreter) மூலம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. புதுதில்லியில் அரசு அதிகாரிகளுடன் உரையாடும் போது தேவைப்பட்டால் மட்டுமே உரைபெயர்ப்பாளரை பயன்படுத்துவார். இந்தி அளவிற்கு ஆங்கிலத்தில் புலமை இல்லாததும், தேசிய மொழியைப் நாம் தான் பயன்படுத்தவேண்டும் என்ற எண்ணமுமே அதற்கு அடிப்படை என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். ஆனால் நரேந்திரமோடி உலகத்தலைவர்கள் வரிசையில் சேர்ந்த பின்னும் தலைவர்களுடன் ஆங்கிலத்தில் பேசுவதை தவிர்த்து இந்தியிலேயே பேசுவதற்குக் காரணம், இந்து தேசியவாதிகளின் மொழி உணர்வு புண்படாமல் காப்பதேயாகும் என அமெரிக்க பத்திரிக்கையான 'தி வாஷிங்டன் போஸ்ட்' (05-06-2014) விமர்சித்தது.



**பராக் ஒபாமா (Barack Obama), அமெரிக்க அதிபர்:** தன் தாய் மொழியான ஆங்கிலத்தில் தான் எல்லா உரையாடலையும் அமைத்துக்கொள்கிறார். உலகத் தலைவர்கள் அனைவருடனும் ஆங்கிலத்தில் தான் தொடர்பு கொள்கிறார். தன் சிறுவயதில் இந்தோனேசியாவில் சிறிது காலம் இருந்ததனால் இந்தோனேஷிய மொழியில் சில வார்த்தைகளையும், சில இந்தோனேஷிய உணவின் பெயர்களை இன்றும் நினைவில் வைத்திருக்கிறார். 2014 இல் இந்தோனேஷிய அதிபருடன் சிறுசிறு வாக்கியங்களோடு இந்தோனேஷியன் மொழியில் உரையாடினார். அமெரிக்க அதிபர்களிலியே பன்மொழிப்புலமை வாய்ந்த தலைவராக தாமஸ் ஜெஃபர்ஸன் (அமெரிக்காவின் மூன்றாவது அதிபர்; 1743–1826) திகழ்கிறார். அவருக்கு ஆங்கிலம் தவிர்த்து கிரேக்கம், லத்தின், பிரெஞ்சு, ஸ்பானிஸ், இத்தாலியன் ஆகிய ஐந்து மொழிகளில் எழுதவும் பேசவும் தெரியும்.



***சீ சின்பிங் (习近平),*** *சீன அதிபர்:* சீ சின்பிங் சீன மொழியில் சிறப்பாகப் பேசுவார். ஆங்கில மொழியைப் பயன்படுத்துவது மிகவும் குறைவு. உலகத் தலைவர்களுடன் உரையாடும் போதும் மொழிபெயர்ப்பாளர் உதவியுடன் சீன மொழியில் பேசுவார். சில நேரங்களில் மிகச்சுருக்கமான உரையாடல்கள் ஆங்கிலத்திலும் நிகழ்த்துவதுண்டு. 2013 இல் அமெரிக்க அதிபர் ஒபாமாவுடனான சந்திப்பில் தனிப்பட்ட சில உரையாடல்கள் ஆங்கிலத்தில் நிகழ்த்தினார். சீனத்தில் 1980 க்குபின் ஆங்கிலம் கற்போரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருந்தாலும் சீனமொழியின் முக்கியத்துவத்தையும் பயன்பாட்டையும் ஆங்கிலத்துக்கு நிகராக வளர்த்துக்கொண்டிருப்பது தான் சீனாவின் சிறப்பு. அதற்கு மிகச்சிறந்த உதாரணம் சீ சின்பிங்.



**ஷின்சோ அபே (安倍 晋三) ஜப்பான் பிரதமர்:** சீனாவைப்போன்று தாய்மொழியின் பயன்பாட்டை ஊக்கப்படுத்தி வளர்த்தெடுப்பதில் ஜப்பானும் முன்னணியில் இருக்கிறது. ஷின் அபே ஜப்பான், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் புலமை பெற்றிருந்தாலும் ஜப்பான் மொழியில் பேசுவதையே உயர்வாகக் கருதுகிறார். மக்களுடனும் தலைவர்களுடனுமான உரையாடலை பெரும்பாலும் ஜப்பான் மொழியிலேயே நிகழ்த்துகிறார். சீனாவின் சீ சின்பிங், துருக்கியின் தயிப் எர்டோகன், இந்தியாவின் நரேந்திர மோடி போன்ற தலைவர்களைப் போன்று ஆங்கிலத்தில் பேசுவதை முற்றிலுமாகத் தவிர்த்து தன் தாய் மொழியை முழுமையாகப் பயன்படுத்துவதில் முன்னனியில் நிற்பவர் ஷின்சோ அபே.

**த.சுந்தரராஜ்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை.

## மகாத்மா காந்தியடிகள்

நாம் இழந்த உரிமையைப் பெற உழைத்த பெருமக்கள் பலராவர். அவர்களுள் தலைசிறந்தவர் அண்ணல் காந்தியடிகள் ஆவர்.

உலக உத்தமர் காந்தியடிகள் 1869 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் நாள் குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் சிற்றூரில் பிறந்தார். இவரின் பெற்றோர் காபா காந்தி, புத்திலிபாய் ஆவர். இவர் உயரிய பண்பினராகவும், ஒழுக்க சீலராயும், வழக்கறிஞராகவும் திகழ்ந்தார்.

காந்தியடிகள் இந்திய விடுதலைக்காக ஆங்கிலேயருடன் பெரிதும் போராடி பலமுறை சிறை சென்றார். ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம் போன்ற பல போராட்டங்களை அறவழியில் நடத்தி வெற்றி கண்டார். இந்து முஸ்லீம் வேற்றுமை தீண்டாமை பெண் அடிமை போன்றவை ஒழிய அயராது உழைத்தனர். இவற்றின் பயனாய் 1947 – ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் நாள் நம் நாட்டிற்கு விடுதலை வாங்கித் தந்தார்.

காந்தியடிகள் வழிநின்று நம் பாரதத்தை மேலும் உரிய நிலைக்கு உயர்த்துவதே அவருக்குச் செய்யும் நன்றி கடனாகும். காலத்தை வெல்ல, காந்திய வழியில் நடப்போமாக!

வணிகம் செய்துவந்த ஆங்கிலேயர் நம் நாட்டை ஆளத்தொடங்கினர். நம்நாட்டு

விடுதலை வீரர்கள் எதிர்த்தனர். பல போராட்டங்களைஅறவழியில் நடத்தினர். நம் நாட்டில் விடுதலை இயக்க தலைவர்கள் மற்றும் தொண்டர்களின் எதிர்ப்பு நாளுக்கு நாள் பெருகியது. ஆயிரக்கணக்கானோர் சிறை சென்றனர். சித்தரவதைப்பட்டனர்.உடனே 15.08.1947 அன்று நமக்கு விடுதலை அளித்தனர். இந்நாளில் அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் பொது இடங்கள் போன்ற இடங்களில் நம் நாட்டுக் கொடியை ஏற்றி, மரியாதை செய்வர்.

நம் நாடு விடுதலை பெற்ற வரலாற்றை நாம் நன்கறிந்து நம் உரிமையைக் காத்து பாரதத்தின் பெருமையை உலகறியச் செய்வோம்.

**பா.சண்முகமூர்த்தி,**
முதலாண்டு உயிர் வேதியியல்.

## பொது அறிவு

### International Day of the November

**2 November**: International Day to End Impunity for Crimes against Journalists

**6 November**: International Day for Preventing the Exploitation of the Environment in War and Armed Conflict

**10 November**: World Science Day for Peace and Development

**14 November**: World Diabetes Day

**15 November** (third Sunday in November): World Day of Remembrance for Road Traffic Victims.

**16 November**: International Day for Tolerance

**19 November**: World Toilet Day

**19 November** (third Thursday in November): World Philosophy Day

**20 November**: Africa Industrialization Day

**20 November**: Universal Children's Day

**21 November**: World Television Day

**25 November**: International Day for the Elimination of Violence against Women

**29 November**: International Day of Solidarity with the Palestinian People

### அபாயங்களை அறிமுகப்படுத்தியவர்கள்

1.அணுகுண்டு–ஆட்டஹான், ஸ்ட்ராங்மன்

2.எந்திரத்துப்பாக்கி – ஜேம்ஸ்பக்கிள்

3.ஏ.கே.47 – கலாஸ்நிக்கோவ்

4.கைத்துப்பாக்கி – கர்மினேலியோ

5.குழல் துப்பாக்கி – சாமுவேல்கோல்டு

6.சைலன்சர் துப்பாக்கி – மாக்சிம்

7.துப்பாக்கிரவை – ரோஜர் பேகர்

8.மெஸீன்கன் - டாக்டர் கேட்டிங்

9.ரிவால்வர் – ரிச்சர்டு கேட்டிங்

10.சினிமா துப்பாக்கி–சாமுவேல் கோல்டு

**மு.ஆதிபவானி**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## பொன்மொழிகள்

நல்லவனை நாடிப்போ..!
தீயவனை கண்டால் ஓடிப்போ...!
முட்டாளிடம் உறவாடாதே...!
நீ முட்டாளாவாய் ...!
உன்னிடம் திறமையிருந்தால்
நாளை உன்கையில் உலகம் ...!
நம்பிக்கையோடு நடந்து போராடு
உன் பயணம் வெற்றியாகும் ...!
முயற்சியிருந்தால் விரலால்
மலையைக் கூட உடைத்திடலாம் ...!
நீ ஏழையாயிருந்தாலும்
கோழையாய் இருக்காதே...!
உன்னை உறுதியாய் நம்பு
உலகில் நீ உயர்ந்திடுவாய்
இன்றைய ஏழைதான்
நாளைய பணக்காரன் ...!

**மூ.ஆதிபவானி**
**தமிழிலக்**கியம் மூன்றாமாண்டு

## வள்ளுவத்தின் சிறப்பு

திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் 133 அதிகாரங்களும் 1330 குறள்களும் உள்ளது நாம் அனைவரும் அறிந்ததே அதில் நம்மில் தெரியாத சில தகவல்கள்

1.திருக்குறளில் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை

2.திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துகள் 42194.

3. 247 தமிழ் எழுத்துகளில் 37 எழுத்துகள் மட்டுமே இடம்பெற வில்லை.

4.திருக்குறளில் இடம் பெறும் இரு மலர்கள் அணிச்சம், குவளை.

5.திருக்குறளில் இடம் பெறும் ஒரே பழம் நெருஞ்சிப்பழம்.

6.திருக்குறளில் இடம் பெறும் ஒரே விதை குன்றிமணி.

7.திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிர் எழுத்து ஔ.

8.திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் பனை, மூங்கில.

9.திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட எழுத்து (1705 முறை)

10.திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துகள் ளீ, நு.

11.திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் ஒன்பது.

12. திருக்குறள் இதுவரை 80 மொழிகளில் வெளிவந்துள்ளது.

**சதீஸ்குமார்.மு.** இரண்டாம் ஆண்டு இளங்கலை உயிரித் தொழில் நுட்பவியல் ஆ பிரிவு.

## தெரிந்து கொள்வோம்

5,10 என ரூபாய் நோட்டுக்கள ஒவ்வொரு நோட்டிலும் ஒவ்வொரு புகைப்படங்கள் இடம் பெற்றிருக்கும் இவை ஒவ்வொன்றும் இந்திய வரலாற்றைப் பறை சாற்றுகின்றன. அதாவது,

ரூபாய் 5 விவசாயத்தின் பெருமை




ரூபாய் 10 விலங்குகளின் பாதுகாப்பு(புலி,யானை,காண்டாமிருகம்)




ரூபாய் 20 கடற்கரை அழகு



ரூபாய் 50 அரசியல் பெருமை(இந்திய நாடாளுமன்றம்)



ரூபாய் 100 இயற்கையின் சிறப்பு (இமயமலை)



ரூபாய் 500 சுதந்திரத்தின் பெருமை (தண்டியாத்திரை)



ரூபாய் 1000 இந்தியாவின் தொழில் நுட்பமேம்பாடு



**ப.கௌசல்யா**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு.

## ரூபாய் நோட்டுகளின் கையெழுத்து

ரூபாய் நோட்டுகளை (இந்தியாவில்) அச்சிடும் உரிமை ரிசர்வ் வங்கியிடம் மட்டுமே உள்ளது. அந்த அனைத்து ரூபாய் நோட்டுகளிலும் கவர்னர் என்று கையெழுத்து இடப்பட்டிருக்கும். அந்த கையெழுத்து யாருடையது என்று சந்தேகமும், குழப்பமும் அனைவரிடத்திலும் எழுகின்றது. அதற்கான விளக்கத்தை கீழே காணலாம்.ஒரு ரூபாய் நோட்டில் மத்திய அரசின் நிதித்துறைச் செயலாளர் கையெழுத்திடுவார். மற்ற ரூபாய் நோட்டுகளில் கையெழுத்திடுவது ரிசர்வ் வங்கி கவர்னர்தான். பிரதமரின் கையெழுத்தை எந்த ரூபாய் நோட்டிலும் காண முடியாது.

**ர. ஃபாமிதா பானு**
மூன்றாமாண்டு மின்னணுவியல்.

## சின்னச்சின்ன கேள்விகள்

1.வால் நட்சத்திரத்தின் மறு பெயர் என்ன?

எல்னோ

2.எக்ஸ் கதிர்களால் குணமாக்கப்படும் நோய் எது?

புற்றுநோய்

3.பார்வை நரம்பு உள்ள இடம் எது?

விழித்திரை

4.மொரிீயஸின் நாணயம் எது?

ரூபாய்

5.மூலிகை கலந்து வரும் அருவி எது?

குற்றாலம்

6.சில்வர் காஸ்கேடு நீர் வீழ்ச்சி எங்கு உள்ளது?

ஏற்காட்டில்

7.நமது தேசியப் பறவை எது?

மயில்

8.சூரிய மண்டலத்தில் சூரியனுக்கு அருகில் உள்ள கிரகம் எது?

புதன்

9.உலகிலேயே மிகப் பெரிய கண்டம் எது?

ஆசியா.

10.சந்திர கிரகணம் என்பது சூரியனுக்கும், சந்திரனுக்கும் நடுவில் வருவது எது?

பூமி

11.மலேசியாவின் தேசிய மலர் எது?

செம்பருத்திப் பூ

12.கண்ணீர் தேசம் என்றழைக்கப்படும் நாடு எது?

இலங்கை

13.நியூட்ரான் குண்டுகளில் பெரும் சேதம் விளைவிக்கக் கூடியது எது?

கதிர்வீச்சு

14.தமிழ்நாட்டில் எவர்சில்வர் தகடுகள் தயாரிக்கப்படும் இடம் எது?

சேலம்

15.எகிப்தியர்களின் முதன்மைக் கடவுள் யார்?

சூரியன்

**கௌரிசங்கர்,சி.**

இரண்டாமாண்டு கணினி அறிவியல், ஈ-பிரிவு

## புத்தரின் போதனைகள்

- எவருடைய சிந்தை குழப்பம் அடையாமல் இருக்கிறதோ
- அவர்களுக்கு அச்சம் என்பது துளியும் இல்லை
- தூய்மையான எண்ணத்துடன் ஒருவன் பேசினாலும், செயல் புரிந்தாலும் மகிழ்ச்சி அவனைப் பின் தொடர்ந்து செல்லும்
- தன்னைத் தானே அடக்கி வெற்றி கொள்பவனே சிறந்த வெற்றியாளன்.
- நல்ல குணமும், புகழும் எங்கு உள்ளதோ அங்கே அவனைப் போற்றப்படும்.
- அச்சமும் வெறுப்பும் இல்லாதவனே அறிஞன்
- கோபத்தை நயத்தால் வெல்ல வேண்டும், தீமையை நன்மையால் வெல்ல வேண்டும்.

**கி.பிரசாந்த்**

தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## ஒளிநிழல் படம்

கவிபாடும் காட்சிகள் – த.சுந்தரராஜ்



